உ

# அணிந்துரை

தமிழிலுள்ள சைவநூல்களுள் அகலத்தாற் சிறந்ததாகிய சிவஞானசித்தியாரானது இரௌரவாகமத்தின் கூறாய் அதன் சாரம் முழுவதையும் கூறுவதாகிய சிவஞான போதத்தின் தமிழ்மொழி பெயர்ப்பாயும் விளக்கமாயுமுள்ள சிவஞான போதத்தை ஆதாரமாயும், அதை விரித்தற்கு வேண்டிய ஆகமப் பகுதிகளைத் துணையாகவும் கொண்டு, சகலாகம பண்டிதரென்னும் காரணப் பெயரையுடையவராகிய அருணந்தி சிவாசாரியரால் அருளப்பட்டது. இதற்கு ஆறு உரைகள் உள்ளன வாயினும் நல்லாசிரியரது துணையின்றி இதன் பொருளைத் தெளிவாயறிதல் அரிதாகும். இந் நூலை நன்கு படித்தவரும் படிப்பித்தவருமாகிய **ஸ்ரீ. க. முருகேசு பி. ஏ. எல். ரி. அவர்கள்** இந்நூற் பொருளை அறிய விரும்புவோர் யாவரும் கற்றறிதற்காக இவ்வசன நூலைச் செய்தார்கள். அற்ப தமிழறிவும் அற்ப சைவ அறிவும் உடையவரெவரும் விளங்கத்தக்க இலகுவான நடையிலே இந் நூல் மிகத் தெளிவாக எழுதப்பட்டது.

இந்நூலின் சீர்மையை அறிந்த நண்பர்களது வேண்டுகோளுக்கிணங்கி நூலாசிரியரின் புதல்வியும் கோப்பாய் அரசினராசிரிய கலாசாலைத் தலைவியுமாகிய **ஸ்ரீமதி. ஞானம் அம்மையார்** இதனை அச்சிடுவிக்கிறனர். இவ்விருவருக்கும் சைவ சமயத்தவருடைய நன்றி உரியது.

இந்நூல் ஆசிரிய கலாசாலைகளிலே உபயோகிக்கப்படத்தக்கது.

கந்தவனம்
கரஹ மாசிமீ 19 உ

ச. சிவபாதசுந்தரம்.

யிரண்டு மாயைகளையும் வியாபித்து அவற்றிற்கு மேலாய் நிலைபெறும். அசுத்த மாயையானது அம் மலங்களுடன் கலந்திருக்கும். அசுத்த மாயையி னின்றும் பிரகிருதி மாயை தோன்றும்.

சுத்த மாயையினின்றும் தோன்றும் பொருட் கள் அல்லது தத்துவங்கள் 1. வைகரி, மத்திமை, பைசாந்தி, சூக்குமை என்னும் நான்கு வாக்குகள்.

2. மந்திரேசுரர் மந்திர மயேசுரர் அணுசதா சிவர் முதலிய தேவர்களுக்குரிய சுத்த அத்துவாக் கள். அவையாவன:— வன்னம் அல்லது எழுத்து, பதம் அல்லது சொல், மந்திரம், புவனம் அல்லது உலகம், தத்துவம், கலை என்னும் ஆறுமாம்.

3. சிவம் சத்தி சதாசிவம் ஈசுரம் சுத்த வித்தை என்னும் ஐந்து சிவதத்துவங்கள் அல்லது சுத்த தத்துவங்கள்.

1. வைகரியாவது பேசுபவன் செவிக்கும் கேட்பவன் செவிக்கும் கேட்கப்படும் ஒலி.

2. மத்திமையாவது மெல்லிய ஓசையாக் கண் டத்திற் றொனிக்கும் ஒலி.

3. பைசந்தி யாவது மனதிற் பிறக்கும் ஒலி.

4. சூக்குமை யாவது மற்றைய மூன்று வாக்கு களுக்கும் காரணமாகிய ஒலி. அவை இதின் விகாரமே யன்றி வேறல்ல. அவற்றிற்கு அழிவுண்டு. இது எனில் நித்தியமானது. சத்தப் பிரமவாதி

3. ஆன்மா தானழியாது சிவனேடுகூடி ஒன்ருகும்.

4. சிவனேடு கூடியபின் னழியும்.

5. அழிவதே முத்தி.

6. நீருடன் நீர் சேர்வதுபோல ஆன்மா சிவனுடன் சேர்ந்தொன்ருகும்.

7. களிம்பு நீங்கியபின் செம்பு பொன்னைப் பொன்னுட னென்ருவதுபோல மலம் நீங்கியபின் ஆன்மா சிவனைச் சிவனுடன் சேரும்.

8. சிவனுமான்மாவுஞ் சித்துப் பொருளாவதினல் முத்தியிலிருபொருளுஞ் சமமாயொன்ருகும்.

மறுப்பு.

1. மரநிழலைச் சிவனுக்கு ஒப்பிடுதல் சரியன்று. ஏனெனில் அங்ஙனம் செய்தல் சுதந்திரம் சிவனுக்கல்ல உயிருக் குரிய தென்று காட்டும்.

2. ஆன்மா தானழிந்தபின் சிவனுடன் சேர மாட்டாது.

3. அழியாமற்கூடினலொன்ருகாது.

4. அழிந்தால் முத்தி பெற்றதெனப்படுவ தொன்றில்லை.

5. இது ஆன்மா நித்தப் பொருளென்பதற்கு விரோதம்.

6. நீரும் நீரும்போல ஆன்மாவுஞ்சிவனுஞ் சமமல்ல.

